**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 25.02.2020

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2050 விகாரி, மாசி மாதம் 13ஆம் நாள் **25.02.2020 செவ்வாய்க்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( கு.வ.2 ) துறை அரசாணை எண்.12, நாள் : 28.01.2013-ல் ரூ.68.83 கோடி மதிப்பீட்டில் தேனி – அல்லிநகரம் நகராட்சியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்திட கீழ்கண்ட நிதிப்பகிர்வில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| TNUDP - III மற்றும் TNUDF கடன் | ரூ. 41.30 கோடி |
| TNUDP - III மான்யம் | ரூ. 20.65 கோடி |
| நகராட்சி பங்களிப்பு | ரூ. 6.88 கோடி |

மேற்படி நிதிப்பகிர்வில் குறிப்பிட்டுள்ள கடன் தொகை ரூ. 41.30 கோடியினை Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited நிறுவனத்தில் இருந்து பெறுவதற்கு கடன் ஒப்பந்தத்தில் மூன்றவாது முறையாக திருத்தம் செய்து 31.03.2019 ம் தேதி வரைக்கும் கால நீட்டிப்பு செய்யப்பட்டு இருந்தது.

தற்போது மேற்படி புதிய குடிநீர்அபிவிருத்தி திட்டப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருந்து 21.02.2020-ம் தேதி முதல் நகராட்சியின் தொடர் பராமரிப்பு பணிக்காக இத்திட்டத்தினை முழுவதுமாக பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்திட்டத்திற்காக Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited நிறுவனத்திடம் மீதம் பெறப்பட வேண்டிய கடன் தொகையினை பெறுவதற்கான காலம் 31.03.2019-ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில், தற்போது 30.09.2020–ம் தேதி வரைக்கும் கடன் பெறுவதற்கான காலத்தினை நீட்டிப்பு செய்ய கோரி Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited நிறுவனத்தில் நான்காவது முறையாக கடன் ஒப்பந்தத்தில் திருத்தம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 4484/2013/இ1)

**தீர்மான எண். 1340 அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 02</u>:

பொது நிதி 2019 - 2020 - ன் கீழ் தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண். 29 ல் பள்ளிவாசல் தெருவிலுள்ள எரியூட்டு மயானம் துவங்கப்பட்டு ஆறு ஆண்டுகள் ஆனநிலையில் மேற்படி மயானம் பொதுமக்களால் அதிகமான பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது மேற்படி மயானத்தின் எரியூட்டும் பாகங்களான Burner Sets, Furnace Door Assembly மற்றும் Gasifier Assembly அதிகளவு Temperature காரணமாக பழுதடைந்த நிலையில் இயக்கப்பட்டு வருவதால் பொதுமக்களின் நலன்கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு 31.01.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக )** | **மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம்** |
|---|---|---|---|
| 1 | M/s.Sun Furnace, Madurai | 872000 | 0.12 % குறைவு |
| 2 | திரு.எம்.குமார், மதுரை | 890000 | 1.95 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள வரிசை எண்.01-ல் குறிப்பிட்டுள்ள M/s.Sun Furnace, Madurai என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.281/2020/இ1)**

**<u>தீர்மான எண். 1341 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 03</u>:

பொது நிதி 2019 - 2020 - ன் கீழ் தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண். 29 ல் பள்ளிவாசல் தெருவிலுள்ள எரியூட்டு மயானம் துவங்கப்பட்டு ஆறு ஆண்டுகள் ஆனநிலையில் மேற்படி மயானம் பொதுமக்களால் அதிகமான பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது மேற்படி மயானத்தின் எரியூட்டும் பாகங்களான Furnace Assembly மற்றும் Scruber Unit அதிகளவு Temperature காரணமாக பழுதடைந்த நிலையில் இயக்கப்பட்டு வருவதால் பொதுமக்களின் நலன்கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு 31.01.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Sun Furnace, Madurai | 872500 | 0.06 % குறைவு |
| 2 | திரு.எம்.குமார், மதுரை | 878000 | 0.57 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள வரிசை எண்.01-ல் குறிப்பிட்டுள்ள M/s.Sun Furnace, Madurai என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.282/2020/இ1)

**<u>தீர்மான எண். 1342 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

பொது நிதி 2019 - 2020 - ன் கீழ் தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான அலுவலர்கள் குடியிருப்பு வளாகத்தில் உள்ள நகராட்சி பொறியாளர் குடியிருப்பில் Water Heater மற்றும் Furniture வாங்கப்பட வேண்டியுள்ளதால் அப்பணியினை மேற்கொள்ளுவதற்கு 31.01.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.மாணிக்கம், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 128300 | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | திரு.டி.தவமணி, நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 130270 | 1.53 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள வரிசை எண்.01-ல் குறிப்பிட்டுள்ள திரு.எஸ்.மாணிக்கம், என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.282/2020/இ1)

**<u>தீர்மான எண். 1343 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 05:

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலகத்திற்கு புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணிக்கு அரசு நிர்ணயிக்கும் நகராட்சி பங்களிப்பு தொகையினை 3 தவணை வீதம் செலுத்திட இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். 670, நாள். 07.06.2013-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்கண்டவாறு தொகைகள் செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதல் தவணை | 20.06.2014 | ரூ. 15.00 இலட்சம் |
| இரண்டாம் தவணை | 16.03.2016 | ரூ. 21.00 இலட்சம் |
| மூன்றாவது தவணை | 26.03.2018 | ரூ. 7.80 இலட்சம் |

இந்நிலையில் தற்போது நான்காவது தவணையாக கூடுதல் பங்களிப்பு தொகை ரூ.5,51,110/-ஐ ( ஐந்து இலட்சத்து ஐம்பத்தி ஒன்றாயிரத்து நூற்று பத்து ) செலுத்திட உத்திரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 15.02.2020 தேதிய ந.க.எண் : 30322 / 2012 / E3 கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

அ ) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

ஆ ) ரூ. 5,51,110 /- ஐ நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்

இ ) மேற்கண்ட தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

ஈ ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.2489/2014/இ1)

**தீர்மான எண். 1344 அ, ஆ மற்றும் ஈ அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 06:

பொது நிதி 2019 - 2020 - ன் கீழ் தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான கர்னல் ஜான் பென்னிக்குக் பேருந்து நிலையத்தில் மூணார் செல்லும் பேருந்துகள் நிற்கும் பிளாட் பாரத்தில் ஏற்கனவே புறகாவல் நிலையத்திற்காக அமைக்கப்பட்டியிருந்த அலுமினியம் மறைப்பிலான ( Aluminium Portition ) அறையினை, இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் பிரிவு 5–க்கான அலுவலகமாக மாற்றி அமைக்கும் பணிக்கு 11.02.2020-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை (ரூ) (வரிகள் நீங்கலாக ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு சதவீதம் |
|---|---|---|---|
| 1 | திரு.பி.முருகேசன், நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 86588.18 | 0.04 % குறைவு |
| 2 | திரு.எம்.தமிழ்செழியன் நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 86699.15 | 0.09 % அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரியுள்ள வரிசை எண்.01-ல் குறிப்பிட்டுள்ள திரு.பி.முருகேசன், என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.293/2020/இ1)

**<u>தீர்மான எண். 1345 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சியில் உள்ள 22 வார்டு பகுதியில் முதல்நிலை குப்பை சேகரித்தல், தரம் பிரித்து குப்பை சேகரிக்கும் கூடத்தில் சேர்க்கவும், திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் அனைத்து சுகாதார பணிகளையும் தனியார் மூலம் ஒப்பந்தத்தின் அடிப்படையில் காலிப்பணியிடங்களுக்கு ஏற்றவாறு பணியாளர்களைப் பெற்று துப்புரவு பணி செய்வதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.28369/து32018 நாள் 22.11.2018–ன்படி 100 துப்புரவ பணியாளர்களை ஒப்பந்த விதிகளின்படி பெற்று பொது சுகாதாரப்பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அலுவலரின் அறிக்கையின்படி மேற்காணும் பணியினை 3 ஆண்டு காலம் அல்லது காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் வரையில் எது முன்னதாக அமைகிறதோ அது வரையிலும் பொதுசுகாதார அவசர வசியம் கருதி ஏற்கனவே 50 தனியார் துப்புரவு பணியாளர்கள் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் மீதமுள்ள 50 தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.8977/2016/இ2 நாள் 16.05.2017–ன்படி, 219–2020–ம் நிதியாண்டிற்கான ஊதிய விகிதத்தின்படி, பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய ESI, EPF, life Insurance, service tax, Uniforms, and safety equipments ஆகியவற்றை சேர்த்து மேற்படி பணிக்கு ஒரு ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.84.68 இலட்சத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரத்திற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டுதனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2736/2019/எச்1)

**<u>தீர்மான எண். 1346 அலுவலக குறிப்பு 1, 2, 3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 08</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு வைகை அணையின் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இயக்கப்படும் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையங்களை தனியார்மூலம் ஒப்படைப்பு செய்து பணியினை மேற்கொள்ள ஓராண்டு காலத்திற்கு மதிப்பீடு தொகை ரூ80.00 இலட்ம் (ரூபாய் எண்பது இலட்சம் மட்டும்)த்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.1331 நாள் 10.02.2020–ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு, நிர்வாக அனுமதி பெறஉரிய கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் வழியாக இவ்வலுவலக கடித ந.க.எண்.650/2020/இ2 நாள் 20.02.2020–ன்படி அனுப்பப்பட்டது.

அதன்படி மேற்கண்ட பராமரிப்பு பணிக்கு திட்ட மதிப்பீடு பரிசீலனை செய்யப்பட்டதில் கூடுதலாக ரு.9.00 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து அனுப்ப கோரியதன் பேரில், திருத்திய மதிப்பீடு ரூ.89.00 இலட்சத்திற்கு (ரூபாய்.எண்பத்தி ஒன்பது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.650/2020/இ2)3

**<u>தீர்மான எண். 1347 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 09</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு புதிய அபிவிருத்தி குடிநீர் திட்டத்தின் கீழ் கக்கன்ஜி காலனியில் கட்டப்பட்டுள்ள உயர்நிலை தண்ணீர் தொட்டிக்கு குடிநீர் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட சுற்றுச்சுவர் கட்டவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 8.80 இலட்சம் ( ரூபாய் எட்டு இலட்சத்தி எண்பதினாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவித்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/இ2)

**தீர்மான எண். 1348 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 10:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் மின் கம்பத்தில் உள்ள மின் இணைப்பு பழுதான மின் வயர்களை மாற்றவும், நகராட்சி அலுவலகத்தின் மின் மீட்டருக்கு வருகின்ற மின் கம்பதில் உள்ள மின் இணைப்பு பழுதான மின் வயர்களை மாற்றவும், பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் புதிய குடிநீர் மின் மோட்டாரை இயக்குவதற்கு, மின் மீட்டர் மின் இணைப்பு வயர்களை மாற்றி Change Over Switch பொருத்துவதற்கும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 92,000/- ( ரூபாய் தொன்னூற்றி இரண்டாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/இ2)

**தீர்மான எண். 1349 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 11:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு புதிய அபிவிருத்தி குடிநீர் திட்டத்தின் கீழ் பாலன் நகரில் கட்டப்பட்டுள்ள உயர்நிலை தண்ணீர் தொட்டிக்கு குடிநீர் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட சுற்றுச்சுவர் கட்டவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 8.80 இலட்சம் ( ரூபாய் எட்டு இலட்சத்தி எண்பதினாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவித்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ2)

**தீர்மான எண். 1350 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 12:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான என்.ஆர்.டி. நகரில் உள்ள உயர்நிலை தண்ணீர் தொட்டி வளாகத்திற்கு குடிநீர் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட சுற்றுச்சுவர் கட்டவும், அதற்கான

உத்தேசச்செலவினம் ரூ.4. 10 இலட்சம் ( நான்கு இலட்சத்தி பத்தாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவித்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/இ2)

**தீர்மான எண். 1351 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 13:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான வள்ளிநகர் மேல்நிலைத்தொட்டிக்கு குடிநீர் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட சுற்றுச்சுவர் கட்டவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.9.80 இலட்சம் ( ஒண்பது இலட்சத்தி எண்பதினாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவித்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/இ2)

**தீர்மான எண். 1350 அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 1352 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 14:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி Raw Water தலைமை நீரேற்று நிலையத்தில் சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தினால், அந்நியர்கள் நுழைந்து அசுத்தம் செய்து வருகின்றனர். ஏனவே, குடிநீர் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட சுற்றுச்சுவர் கட்டவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ.3.30 இலட்சம் (மூன்று இலட்சத்தி முப்பதினாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவித்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். /2020/இ2)

**தீர்மான எண். 1353 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 15:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கருவேல்நாயக்கன்பட்டியில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள தண்ணீர் தொட்டிக்கு குடிநீர் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட சுற்றுச்சுவர் கட்டவும், அதற்கான

உத்தேசச்செலவினம் ரூ.8.90 இலட்சம் ( எட்டு இலட்சத்தி தொன்னூராயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலககுறிப்பு:</u>** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவித்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ2)

**<u>தீர்மான எண். 1354 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 16</u>:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கருவேல்நாயக்கன்பட்டியில் புதிய அபிவிருத்தி குடிநீர் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள உயர்நிலை தண்ணீர் தொட்டிக்கு குடிநீர் பாதுகாக்கும் பொருட்டு சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட சுற்றுச்சுவர் கட்டவும், அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 5.55 இலட்சம் ( ரூபாய் ஐந்து இலட்சத்தி ஐம்பத்தி ஐந்தாயிரம் மட்டும் ) த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவித்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ2)

**<u>தீர்மான எண். 1355 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 17</u>:

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம் ( வைகை அணையின் ஆதாரமாகக்கொண்டு ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிவுற்ற நிலையில் இத்திட்டத்தினை 21.02.2020 ம் நாளில் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் தலைமை நீரேற்றும் நிலையம் ( Raw Water - வைகை ஆற்று - Intake Well ) குருவம்மாள்புரம் பகுதியில் கட்டப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் Filter bed மற்றும் Clear Water -ஆகியவைகளை இயக்க மின் பணியாளர் ( Electrision ) - 3 Nos, மற்றும் இயக்க உதவியாளர் ( Helper ) - 9 Nos, தேவைப்படுகிறது. இதற்கான ஊதியத்தை , மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை. ந.க.எண்.11793/201/இ2. நாள். 26.08.2019 ன்படி, பணியாளர்களின் ஊதிய நிர்ணயத்தின் (2019-2020) அடிப்படையில் கீழ்க்காணும் விபரப்படி பணியாளர்களுக்கு ஊதிய பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

**பணியாட்கள் விபரம்.**

| | | |
|---|---|---|
| 1. | வயர்மேன் ( Electrision ) - 3 பேர் | 3 x 343x30x=30870.00 |
| 2. | இயக்க உதவியாளர் ( Helper )-9பேர் | 9 x286x30x= 77220.00 |
| மொத்தம் | | 108090.00 |
| ESI -4.75%, Employee Contrbution- 1.75% மற்றும் EPF -13 % | | 20537.00 |
| **ஆகமொத்தம்** | | **128627.00 (Round ) - 130000.00** |

மேற்படி பணியாட்களுக்கு ஊதியம் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 1,30,000/- ஆகும். மேலும் மேற்படி பணியாட்களை 3 மாதத்திற்கு பணிஅமர்த்தும் பொருட்டு,உள்ளூர் ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று, ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும், அதற்கான செலவினத்தொகையை ரூ. 4.00 இலட்சத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவித்தொகையை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2020/இ2)

**தீர்மான எண். 1356 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 18:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழைய மற்றும் புதிய குடிநீர் திட்டத்தில் மணல் படுகை மற்றும் வால்வுகள் (Filter bed & Valves ) பழுதடைந்து மிக மோசமான நிலையில் உள்ளதை மாற்றி புதிதாக பொருத்தும் பணிக்கு 07.02.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ** | **கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| 1 | திருமதி. சி. லட்சுமி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்.தேனி | 461671.22 | 0.34 % கூடுதல் |
| 2. | திருமதி. டி. தவமணி.<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,தேனி | 459855.18 | 0.05 % குறைவு |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி.தவமணி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 332/2020/இ2)

**தீர்மான எண். 1357 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 19:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள புதிய குடிநீர் திட்டத்தில் பழுதான Flaculator ஐ பழுதுபணி பார்த்திடல் பணிக்கு 07.02.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருமதி. சி. லட்சுமி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்.<br>தேனி | 343000.00 | 0.88 % கூடுதல் |
| 2. | திருமதி. டி. தவமணி.<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>தேனி | 339500.00 | 0.14 % குறைவு |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.14 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி.தவமணி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.333/2020/இ2)

**தீர்மான எண். 1358 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 20:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள பழைய குடிநீர் திட்டத்தில் உள்ள பழுதான Flaculator ஐ பழுதுபணி பார்த்தல் பணிக்கு 07.02.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருமதி. சி. லட்சுமி,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்.<br>தேனி | 488000.00 | 0.61 % கூடுதல் |
| 2. | திருமதி. டி. தவமணி.<br>நகராட்சி ஒப்பந்ததாரர்,<br>தேனி | 484500.00 | 0.10 % குறைவு |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. டி.தவமணி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.334/2020/இ2)

**தீர்மான எண். 1359 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 21:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமன பழைய மற்றும் புதிய குடிநீர் திட்டமான பழனிசெட்டிபட்டி தலைமைநீரேற்று நிலையத்திற்கு தேவையான ஆலம் சப்ளை செய்யும் பணிக்கு 21.02.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Sri, Sathya Dyes and Chemicals, Aundipatti | 233000.00 | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2. | People Chemichals Industries, Aundipatti | 250000.00 | 7.29 % கூடுதல் |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள Sri, Sathya Dyes and Chemicals, Aundipatti அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 1360 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 22:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழைய குடிநீர் திட்டமான பழனிசெட்டிபட்டி தலைமைநீரேற்று நிலையத்தில் புதிய குளோரினேசன் சிஷ்டம் (மணிக்கு 5 கிலோ அளவிற்கு ) 2 எண்ணம் அமைத்தல் மற்றும் தேவையான குளோரிசேன் சப்ளை செய்யும் பணிக்கு 21.02.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 1 | Sri, Sathya Dyes and Chemicals, Aundipatti | 644039.77 | 0.03 % குறைவு |
| 2. | People Chemichals Industries, Aundipatti | 672658.00 | 4.40 % கூடுதல் |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள Sri, Sathya Dyes and Chemicals, Aundipatti அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.848/2020/இ2)

**தீர்மான எண். 1361 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 23:

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய குடிநீர் திட்டமான பழனிசெட்டிபட்டி தலைமைநீரேற்று நிலையத்தில் புதிய குளோரினேசன் சிஷ்டம் (மணிக்கு 5 கிலோ அளவிற்கு ) 2 எண்ணம் அமைத்தல் மற்றும் தேவையான குளோரிசேன் சப்ளை செய்யும் பணிக்கு 21.02.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Sri, Sathya Dyes and Chemicals, Aundipatti | 644038.72 | 0.03 % குறைவு |
| 2. | People Chemichals Industries, Aundipatti | 672658.00 | 4.40 % கூடுதல் |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள Sri, Sathya Dyes and Chemicals, Aundipatti அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.849/2020/இ2)

**தீர்மான எண். 1362 அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 24</u>:

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கே.ஆர்.ஆர் நகரில் பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் உயர்நிலை தண்ணீர் தொட்டி கட்டப்பட்ட பகுதி தவிர மீதமுள்ள இடத்தில் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பயன்படும் வகையில் நடைபாதை மற்றும் பூங்கா அமைத்து தர கோரியதின் பேரில் மேற்காணும் இடத்தில் நடைபாதை மற்றும் பூங்கா அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 7.20/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   **(ந.க.எண். 890 /2020/இ3)**

**<u>தீர்மான எண். 1363 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 25</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு II அலுவலகம் தற்போது தற்காலிகமாக அல்லிநகரத்தில் உள்ள நகராட்சி ஆரம்பபள்ளியில் இயங்கி வருகிறது. மேற்படி பொது சுகாதாரப்பிரிவு II அலுவகத்திற்கு புதியதாக அலுவலகம் அல்லிநகரத்தில் யூனியன் ஆபிஸ் தெருவில் உள்ள நகராட்சி இடத்தில் கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9.75/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   **(ந.க.எண்.835/2020/இ1)**

**<u>தீர்மான எண். 1364 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 26</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அல்லிநகரத்தில் உள்ள பேருந்து நிலைய நிழற்குடையானது பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதனை அப்புறப்படுத்தி பொதுமக்களின் நலன் கருதி அந்த இடத்தில் புதிதாக நிழற்குடையினை கட்டப்பட வேண்டியிருப்பதால் அதற்கான மதிப்பீடு தொகை ரூ. 4.70/- இலட்சம் ஆகும்.

மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..
(ந.க.எண்.834/2020/இ1)

**<u>தீர்மான எண். 1365 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 27</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு I அலுவலகம் அல்லிநகரத்தில் யூனியன் ஆபிஸ் தெருவில் உள்ளது. மேற்படி அலுவலக கட்டிடம் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக அதே இடத்தில் கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 8.70/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..
(ந.க.எண்.836/2020/இ1)

**<u>தீர்மான எண். 1366 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 28</u>:

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விபரத்தினை அவ்வப்பொழுது நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை ஆகிய அலுவலகங்களுக்கு புகைப்படம் எடுத்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட வகையில் புகைப்படம் எடுத்துள்ள நிறுவனமான சிவா ஸ்டுடியோ அனட் வீடியோ நிறுவனத்திடம் இருந்து பட்டியல் தொகை மொத்தம் ரூ. 20530/- வழங்குமாறு கோரப்பட்டுள்ளது

மேற்படி பணியானது அவசர அவசியம் கருதி உடனடியாக பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் சிவா ஸ்டுடியோ அனட் வீடியோ சமர்ப்பித்துள்ள பட்டியல் தொகை ரூ. 20530/- ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில்

இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..
**(ந.க.எண்.2706/20‘19/இ1)**

**<u>தீர்மான எண். 1367    அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர்  மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம்  நகராட்சி